மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
E.A. No.12/2013 In
E.P. No.9/2012

பெயர் : தமிழரசி
சாட்சி – ம.சா–1 நாள்: 28.08.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ம.சா.ஆ.1 கிரைய பத்திரத்தை எனது தந்தை சின்னசாமிக்கு ராசம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.11.2010 தேடிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ராசம்மாள் 11.01.2011 தேதியில் ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. ராசம்மாள் எழுதிக் கொடுத்ததாக சொல்லும் செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

2. 03.01.1991 தேதியில் சுப்ரமணி வசந்தி பெயருக்கு உயில் எழுதி வைத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலின் அடிப்படையில் தான் வசந்தி எனது தகப்பனார் பெயருக்கு கிரயம் எழுதிக் கொடுத்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலின் அசல் எனது தகப்பனாரிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் சின்னசாமி இடம் இருந்து கிரயம் வாங்கிய பின்னர் அந்த உயிலின் அசலானது என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல.

3. நான் எனது மனுவில் அல்லது நிரூபண வாக்குமூலத்தில் உயிலின் அசலினை வசந்தி வேறொரு சொத்தை விற்ற நபரிடம் கொடுத்துள்ளார் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சாட்சி மனு மற்றும் நிரூபன வாக்குமூலத்தை படித்து பார்த்துவிட்டு நிரூபன வாக்குமூலத்தில் 5 வது பத்தியில் சொல்லி உள்ளதாக சொல்கிறார். மனுவில் ஆங்கிலத்தில் உள்ளதால் எங்கு எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியவில்லை என்றும் சொல்கிறார். நான் சொல்வது போல் மனுவில் அவ்வாறு சொல்லவில்லை என்றும், சொல்லாததால் தான் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

4. நான் எனது மனுவில் சொல்லாமல் பின்னிட்டு எனது நிரூபன வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தெரிவித்துள்ளதை தெரிந்து கொண்டு அவ்வாறு சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. ராசம்மாள் 1ம் எதிர்மனுதாரரின் தாயார் என்றால் சரிதான். சின்னசாமிக்கு என்னையும் சேர்த்து 4 பேர் வாரிசுகள் ஆவோம். நான் எனது மனுவின் வாரிசு வரைபடத்தில் சின்னசாமிக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சின்ன சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனது சகோதரிகளுக்கும் உரிமை உண்டு என்றால் சரியல்ல. சின்னசாமி எனக்கு மட்டும் எழுதிக் கொடுத்துள்ளதால் எனக்கு மட்டுமே பாத்தியம் ஆகும்.

5. சுப்ரமணியம் வசந்திக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லும் உயிலானது எனது சகோதரிகளிடம் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. நான் சுப்பிரமணியம் எழுதிக் கொடுத்ததாக சொல்லும் உயிலில் மனு சொத்தை தவிர இதர சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான். உயிலின் அசலானது என்னிடம் தான் உள்ளது என்றும், நான் தான் மேற்படி உயிலுக்கு நம்பத் தகுந்த பாதுகாவலர் என்றும், சொன்னால் சரியல்ல. உயிலின்படி சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டால் அந்த உயிரின் அசலினை தாக்கல் செய்து அதில் உள்ள சாட்சிகளை விசாரணை செய்து நிரூபணம் செய்தால்தான் சொத்து எனக்கு பாத்தியம் என்றால் சரியல்ல.

6. நாரணாபுரம் கிராமம் பட்டா எண்.1274 இன் படி ராஜம்மாள் என்பவரின் பெயரில்தான் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. வரி ஆவணங்கள், வருவாய் ஆவணங்கள் அனைத்தையும் எனது பெயருக்கு நான் மாற்றி உள்ளேன். எனது பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1997 ஆம் ஆண்டில் இருந்து 1ம் எதிர்மனுதாரர் செல்வராஜ் தான் மனு சொத்திற்கு வீட்டு வரி உள்ளிட்ட வரி வகைகளை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

7. 1ம் எதிர்மனுதாரர் மனு சொத்தான 5 1/2 சென்டிற்கும் சேர்த்துதான் அவர் வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. உயிலின் படி சொத்து எனது அப்பாவிற்கு வந்ததாகவும், அந்த உயிலின்படி எனக்கு அவர் கிரயம் செய்து கொடுத்ததாகவும் சொல்வது ஏற்புடையது அல்ல என்றும், அசல் உயிலை நிரூபிக்காமல் நான் சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

8. ராசம்மாள் எனது தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து விட்டதால் ராசம்மாளிடமிருந்து எனது தகப்பனாருக்கு எந்த உரிமையும் சேரவில்லை என்றும், அதன் அடிப்படையில் எனக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் சுவாதீனத்திற்கு தடை செய்வதற்கு எனக்கோ, வேறு யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.28 18:45:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.